03.10.2025

MC.22/2024

PW–2, வனிதா

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் குடியிருந்து வருவது திருமங்கலத்தில் என்றால் சரிதான். நான் எனது கணவருடன் ஒன்றாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணத்தின் போது கொடுக்கப்பட்ட சீர்வரிசை பொருட்கள் குறித்து ஏதேனும் ஆவணம் எழுதப்பட்டு நான் ஏதேனும் சாட்சிக் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. மனுதாரர் தரப்பில் எவ்வளவு சீர்வரிசை பொருட்கள், நகைகள் போட்டார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தெரியும். ஒரு தம்பி தான் இந்த வழக்கின் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் எதுவும் அழைப்பாணை எதுவும் வரவில்லை. எங்கள் குடும்பத்தில் இப்போது வரை சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை ஆகவில்லை என்றால் சரிதான். எங்கள் குடும்ப சொத்து சம்பந்தமாக எனக்கும் எதிர்மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு உள்ளது என்று சொன்னாலும் அதன் காரணமாக தான் எதிர்மனுதாரருக்கு எதிராக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் அதுகுறித்து எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. அவ்வாறு நேடியாக எனக்கு தெரிந்திருந்தால் முதன்மை மனுவிலேயே இதுகுறித்து மனுதாரர் சொல்லியிருப்பார் என்றாலும் எனக்கு தெரியாததால் தான் அதை சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பாலாஜி டிரேடர்ஸ் என்ற பெயரில் நிறுவனம் நடத்திவருகிறார் என்பது உண்மையில்லை என்றாலும்

அவருக்கு எந்த வகையிலும் வருமானமும் வரவில்லை என்று சொன்னால் சரியில்ல. மனுதாரரும் எதிர்மனுதாரரும் சென்னம்பட்டியில் ஒன்றாக குடியிருந்து வரவில்லை என்றாலும் திருமங்கலத்தில் தான் குடியிருந்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் சென்னம்பட்டியில் தான் கூட்டாக குடியிருந்து வந்தார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.